செ.வெ. எண்: 351 நாள்: 19-06-2012

## பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பள்ளி வளாகங்களிலேயே "இணையதளம்" மூலமாக பதிவு செய்ய ஏற்பாடு

செய்திக் குறிப்பு

இந்த ஆண்டு பத்தாம் வகுப்புத் தேர்வில் 11,46,340 மாணவ மாணவியர் கலந்துக் கொண்டு தேர்வினை எழுதியுள்ளனர். இத்தேர்வில் 9,05,538 மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்கள் தங்களது மதிப்பெண் சான்றிதழ் பெறும் நாளிலிலேயே அவர்களது கல்வித்தகுதியினை தாங்கள் பயின்ற பள்ளிகளிலேயே பதிவுச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவ, மாணவியர் தங்களுடைய கல்வித் தகுதியை வேலைவாய்ப்பக "இணையதளம்" வாயிலாக தாங்கள் பயின்ற பள்ளியின் மூலமாக பதிவு செய்து கொள்ளலாம். இதற்கான ஏற்பாடுகளை பள்ளிக் கல்வித் துறை மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இணைந்து மேற்கொண்டுள்ளன.

வேலைவாய்ப்பகத்தில் தங்களது கல்வித் தகுதியினை பயின்ற பள்ளிகளில் பதிவு செய்ய விரும்பும் மாணவ, மாணவியர்கள் தங்களது மதிப்பெண் சான்றிதழைப் பெற பள்ளிக்குச் செல்லும் பொழுது தங்களது குடும்ப அட்டை மற்றும் சாதிச் சான்றிதழினை உடன் எடுத்துச் செல்ல வேண்டும். மேலும், தங்களது குடும்ப அட்டையினில் பதிவுதாரரின் பெயர் இருப்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தற்பொழுது புதியதாகப் பதிவு செய்ய விரும்புவோருக்கு புதிய பதிவு எண்ணுடன் கூடிய அடையாள அட்டை பதிவு செய்யும் நாளிலேயே உடனுக்குடன் வழங்கப்படும். மாணவ, மாணவியர் மாற்றுத் திறனாளிகளாக இருப்பின் தங்களுடைய கல்வித் தகுதியை பள்ளிகளில் பதிவு செய்த பின்னர், தங்களுடைய முன்னுரிமையை (priority) வேறு ஒருவேலை நாளில் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும். பத்தாம் வகுப்பு தவறிய மாணவ, மாணவியர்கள் தங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயே நேரடியாக பதிவு செய்து கொள்ளலாம்.

பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் 21.06.2012 அன்று பள்ளிக் கல்வித் துறையினரால் வழங்கப்படவுள்ளது. 21.06.2012 அன்று அந்தந்த பள்ளிகளிலேயே மாணவ மாணவியர் பதிவு செய்து வேலைவாய்ப்பு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு பதிவு செய்யப்படும் மாணவ, மாணவியருக்கு பத்தாம் வகுப்பு கல்வித் தகுதிக்கு 21.06.2012 தேதியிட்ட பதிவு மூப்பு 21.06.2012 முதல் 05.07.2012 வரை (15 நாட்கள்) வழங்கப்படும்.

கடந்த மாதம் 12-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிட்ட போது இதே போன்று இணையதளம் மூலம் பதிவு செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 4,68,531 பதிவுகள் பள்ளிகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வேலைவாய்ப்பு பதிவு அட்டை வழங்கப்பட்டது. எனவே இதே வசதியை பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியை தாங்கள் பயின்ற பள்ளிகளிலேயே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை,
சென்னை.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**